**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**STC No.221/2022 Date:06-06-2024**

**வா.சா.1 – மல்லக்கவுண்டர், த/பெ.முத்துசாமி**

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ஏகாபுரம் கிராமம், வண்ணாங்காட்டில் குடியிருக்கிறேன். நான் எந்த தாலுகாவை சார்ந்தவன் என்றால் சங்ககிரி தாலுகாவை சார்ந்தவன். எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் பாப்பம்பாடியில் குடியிருக்கிறார். எதிரி எந்த தாலுகாவை சார்ந்தவர் என்றால் ஓமலூர் தாலுகாவை சார்ந்தவர். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நெசவு தொழில், விவசாயம் செய்து வருகிறேன். நான் நெசவுத்தொழில் செய்து வருவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன் என்றால் இல்லை.

2) எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் எனக்கு என்ன வருமானம் வருகிறது என்பது குறித்து நான் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் நெசவு தொழில் மற்றும் விவசாயம் செய்து வருகிறார். எதிரி வீட்டிலிருந்து தறி மட்டும் தான் ஓட்டி வருகிறார் என்றால் வீட்டிலிருந்து தறி ஓட்டி வருகிறார், வேறு வியாபாரம் செய்து வருவதாக சொன்னார். எதிரி வேறு வியாபாரம் செய்து வருகிறார் என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

3) எனது மாத வருமானம் மற்றும் ஆண்டு வருமானம் குறித்து புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் எந்த வகையில் பழக்கம் என்று புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எதிரி கடனை ஒரே நேரத்தில் தான் வாங்கினார் என்றால் சரிதான். அப்போது, யார் என்னுடன் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை, நானும் எதிரியும் மட்டும் தான் இருந்தோம். எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேன் என்றால் புகாரில் எனது வீட்டில் வைத்து தான் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன்.

4) எதிரிக்கு நான் கொடுத்த கடனுக்காக வேறு ஏதேனும் ஆவணத்தை பெற்றேனா என்றால் இல்லை, காசோலை மட்டும் தான் பெற்றேன். நான் வேறு எந்த ஆவணத்தையும் எதிரியிடமிருந்து பெறவில்லை என்று எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையெழுத்து ஒரே

மாதிரியாகத்தான் உள்ளது என்றால் சரிதான், எதிரி தான் பூர்த்தி செய்து எடுத்து வந்து கொடுத்தார். காசோலையை எதிரி என் முன்னிலையில் பூர்த்தி செய்தாரா என்றால் இல்லை, பூர்த்தி செய்த காசோலை என்னிடம் எடுத்து வந்து கொடுத்தார்.

5) எதிரி எந்த காரணத்திற்காக என்னிடம் கடன் வாங்கினார் என்பது குறித்து எனது புகாரில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன், தனது குடும்பம் மற்றும் வியாபார தேவைக்காக கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன், கைமாற்று கடனாக வாங்கினார் என்றும் சொல்லியுள்ளேன். எதிரிக்கு நான் கடன் கொடுக்கும்போதே காசோலையை கொடுத்துவிட்டாரா என்றால் கொடுத்து விட்டார். எதிரிக்கும், எனக்கும் பழக்கம் இல்லை என்று சொல்லும்போது நான் எவ்வாறு எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் எதிரிக்கும், எனக்கும் நூல் எடுத்து சேலை விற்கும் பொழுது 6-7 வருடங்களாக பழக்கம் அதன் அடிப்படையில் நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன், மேலும் அவ்வப்போது எதிரி என்னிடம் கைமாற்றாக கடன் வாங்கி இருந்ததால் கொடுத்தேன்.

6) எதிரி என்னிடம் வாங்கிய கைமாற்று கடன்களை அவ்வப்போதே கொடுத்து விட்டார் என்றால் சரிதான். எதிரியைத் தவிர நான் வேறு யாருக்காவது கடன் கொடுத்து வருகிறேனா என்றால் ஒரு சில நபர்களுக்கு கைமாற்று கடனாக கொடுத்து வருகிறேன். நான் மற்றவர்களுக்கு கடன் கொடுக்கும்போது யாரேனும் ஒருவரை சாட்சியாக வைத்து கடன் கொடுப்பேன் என்றால் கொடுப்பேன், ஆனால் எதிரிக்கு கடன் கொடுக்கும் போது மட்டும் நான் யாரையும் சாட்சியாக வைத்து கடன் கொடுக்கவில்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்தது குறித்து மற்ற எவரேனும் ஒருவரை நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7) முருகன் என்பவர் என்னிடம் கடன் வாங்கி சீட்டு போட்டுக் கொண்டு வருகிறார் என்றால் முருகன் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. முருகன் என்பவர் என்னிடம் வாங்கிய சீட்டு தொகைக்காக எதிரியுடைய காசோலையை செக்யூரிட்டிக்காக கொடுத்ததை நான் பெற்றுக்கொண்டு அதனை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் எந்த ஒரு வரவு/செலவும் இல்லை என்றும், நானே பூர்த்தி செய்து கொண்ட காசோலையை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

Witness (Sd)-Mallagoundar

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.